ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான வெளியீடு.

# ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள்
# ஸ்தல வரலாறு.



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான பரம்பரை தர்ம கர்த்தாக்களான ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் ஸ்ரீகார்யம் & ஏஜண்டு அவர்களால் ப்ரசுரிக்கப்பட்டது,

1943.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்



समरविजयकोटी साधकानन्दधाटी मृदुगुणपरिपेटी मुख्यकादम्बवाटी ।
मुनिनुतपरिपाटी मोहिताजाण्डकोटी परमशिववधूटी पातु मां कामकोटी ॥

உ

# ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் ஸ்தல வரலாறு



——:o:——

## ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம்.

"நகரங்களுக்குள் சிறந்தது காஞ்சீ," என்று ஓர் பழமொழி இந்திய நாடெங்கும் வழங்கிவருகிறது. காஞ்சி காமாக்ஷி, காசி விசாலாக்ஷி, மதுரை மீனாக்ஷி, என்ற வசனமும் நமது தென்னாட்டவர் எல்லோருடைய நாவிலும் இளமைப் பருவம் முதலே உலாவிக்கொண்டு வருகிறது. இப்புண்ய பூமியாகிய பாரதநாட்டில் மோக்ஷ புரிகளென்று ஏழு மஹா க்ஷேத்திரங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளுள் ஒன்று காஞ்சீபுரம். 'திருக்கச்சி' என்று பாடல்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த க்ஷேத்திரம் ஸத்தியஸத்தியர், ஸத்திய சோதகர், ஸத்திய ஸங்கல்பர், ஸத்திய காமர்களான, சர்யை, க்ரியை, யோகஞானிகள் வாழப்பெற்ற ஸத்யவ்ரத க்ஷேத்திரமாம். நான்கு புரங்களிலும் தவப் புரங்களைக் கொண்ட காரணத்தால் "தபோவனம்" என்றும் பிரமனால் யாகம் செய்யப்பட்ட இடம் என்று சொல்லப்படுவதால் "பிரம்மசாலை" என்றும், "த்வாதசாந்தாதீத முக்தி க்ஷேத்ர" மெனவும் இக் காஞ்சிபுரத்திற்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கச்சி என்றும் காஞ்சிபுரமென்றும் சொல்லப்படும் இப்புண்ய நகரில் பராசக்தியாய் தனிக்கோவில்கொண்டு எழுந்தருளி

யிருக்கும் உமைக்குக் காமாக்ஷி என்று பெயர். இதர ஊர்களிலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் அம்பாளுக்கு மூலஸ்தான ஸந்நிதி உண்டு. ஸ்ரீ காஞ்சீபுரத்திலுள்ள எண்ணிறந்த சிவாலயங்களில் ஒன்றிலுமே அம்பாள் மூலஸ்தான ஸந்நிதி கிடையாது. ஸ்ரீகாஞ்சியில் அம்பிகை தவக்கோலத்துடனிருப்பதால்தான் அங்குள்ள சிவாலயங்களில் அம்பாள் மூலஸ்தான ஸந்நிதி இல்லை என்று பெரியோர் கூறுவர்.

## ஸ்தலமும் இருப்பிடமும்.


செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஓர் புராதன நகரம் காஞ்சீபுரம். செங்கற்பட்டு ரயில்வே ஜங்ஷனிலிருந்து அரக்கோணம் ஜங்ஷனுக்குச் செல்லும் இருப்புப் பாதையிலிருக்கும் கஞ்சீவரம் என்னும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து, ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவாலயம் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கின்றது.

## யாத்ரீகர்களுக்குத் தங்க வசதிகள்.


காஞ்சீபுரத்தில் யாத்ரீகர்கள் தங்கும் பொருட்டுக் கங்காபாய் சத்திரம் என்றும், கொல்லா கன்னய்யா செட்டி சத்திரமென்றும் முக்கியமாய் இரண்டு சத்திரங்களிருக்கின்றன. கொல்லா சத்திரம் காமாக்ஷி அம்பாள் கோவில் வாயிலுக்கு அருகிலேயே இருக்கின்றது. இவைகளைத் தவிர மற்றும் சில சத்திரங்களும் இருக்கின்றன.

## கோவிலின் அமைப்பு.

காஞ்சிமா நகரின் மத்தியில் கேந்திரஸ்தானத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ காமாக்ஷி அம்மையின் தேவாலயம். நான்கு அழகிய கோபுரங்களுடன் கூடிய பெரிய மதில்



N
மேலண்டை மாட வீதி
மேற்குக் கோபுரம்
வடவண்டை மாட வீதி
கொட்டகை உற்சவ மண்டபம்
வடக்குக் கோபுரம்
மண்டபம்
குளம்
நவராத்திரி கொலு மண்டபம்
நூற்றுக்கால் மண்டபம்
சுக்கிரவார மண்டபம்
பெருமாள் சந்நிதி
காமாக்ஷி அம்மன் கோயில்
கிணறு
வாகன மண்டபம்
தெற்குக் கோபுரம்
விசுவநாதர் கோயில்
மடைப்பள்ளி
த்வஜாரோகண மண்டபம்
கிழக்கு மாட வீதி
2
3
4
5
6
7
8
9
10
12
13
14
16
17
18
19
20
21
22



பூர்த்தியடையும் தருவாயிலிருக்கும்
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
ஸ்ரீசக்ராகாரமான வெள்ளி ரதம்

களுடன் விளங்கும் ஸ்ரீ அம்பிகையின் கோவில் நகரின் நடுவில் திக்கு நியமத்தில் சற்று சாய்ந்து, அநேகமாய்க் கிழக்கு நோக்கி நிற்கின்றது. நான்கு வெளிப் ப்ராகாரங் களின் அளவு கீழ்க்கண்டவாறு :—

| | | |
|---|---|---|
| கிழக்குப் ப்ராகாரம் | 388 | அடி நீளம். |
| தெற்குப் ப்ராகாரம் | 488½ | ,, |
| மேற்குப் ப்ராகாரம் | 440 | ,, |
| வடக்குப் ப்ராகாரம் | 396 | ,, |

ஆலயத்தினுள்ளிருக்கும் காயத்ரீ மண்டபத்தைச் சுற்றி உள்ள உள்ப்ராகாரத்தின் அளவு கீழ்க்கண்ட வாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| கிழக்கு ப்ராகாரம் | 70 | அடி நீளம் | 13½ | அடி அகலம் |
| தெற்கு ப்ராகாரம் | 72 | ,, | 9 | ,, |
| மேற்கு ப்ராகாரம் | 80 | ,, | 20 | ,, |
| வடக்கு ப்ராகாரம் | 72 | ,, | 8½ | ,, |

ஸ்ரீ அம்பாளின் ஆலயத்திலுள்ள கோபுரங்களில் கிழக்குக் கோபுரம்தான் மிகவும் பெரியது. சுமார் 90 அடி உயரமும், 60 அடி அகலமும் உள்ளது. மற்றக் கோபுரங்களெல்லாம் இதைவிடச் சிறியவை. ஸ்ரீ அம்பாள் மூலஸ்தானம் உத்ஸவமூர்த்தி இருக்குமிடம், ஸ்ரீ பங் காரு காமாக்ஷி ஆஸ்தானம் — இவ்விடங்களின்மேல் சிக ரங்களையுடைய அழகிய விமானங்களும் இருக்கின்றன.

ஸ்ரீ அம்பாள் கோவிலுக்குள் அமைந்திருக்கும் காயத்ரீமண்டபம் மிகவும் முக்கியமான பாகமாகும். ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் மூலஸ்தானமும் ஸாளக்கிராம

சிலையில் ஸ்ரீ சக்ரப்ப்ரதிஷ்டையும் பிலாகாசமும் உள்ள கர்ப்பக்கிரஹமும், அர்த்த மண்டபமும், மேடையாயுள்ள காயத்ரீ மண்டபத்தை ஆதாரமாகக்கொண்டு இருக்கின்றன. காயத்ரீ மண்டபத்திற்கு அப்பெயர் வந்ததற்குக் காரணம் அம்மண்டபத்தில் காயத்ரீ மந்திரத்தை அநுஸரித்து 24 தூண்கள் இருக்கின்றன. காயத்ரீ மண்டபத்திற்கு வெளியில் ஓர் ப்ராகாரமும் அதைத் தவிர வெளிப் ப்ராகாரமும் அமைந்திருக்கும் விவரம் மேலே கூறப்பட்டுள்ளது. வெளிப்ராகாரத்திலிருந்து உள்ப்ராகாரத்திற்குச்செல்லும் வழியில் தர்மஸ்தம்பம் என்ற பெயருடன் ஒரு ஸ்தம்பம் இருக்கிறது. அம்பாள் கோவில் ஆதலால் ஸந்நிதிக்கு எதிரில் நந்திக்குப் பதிலாக ஸிம்மம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கிழக்குக் கோபுரவாசல் பக்கத்தில் யாகசாலை மண்டபமும், அதற்குப் பக்கத்தில் வாஹன மண்டபமும் அமைந்துள்ளன. வடக்குக் கோபுர வாயிலுக்கு மேல்புறத்தில் கொட்டகை உத்ஸவ மண்டபமும் கீழ்ப்புறத்தில் சற்று உள்ளடங்கினாற் போல் நூற்றுக்கால் மண்டபமும் அமையப்பெற்றுள்ளன. தென்மேற்கு மூலையில் நவராத்திரிக் கொலு மண்டபமும் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளியும் அதற்குச் சற்று வடக்கில் துவஜாரோஹண மண்டபமும் இருக்கின்றன. கிழக்கு ஸன்னிதிக்கெதிரில் துவஜ ஸ்தம்பமும் பலிபீடமும் அதற்குச் சற்று வடமேற்கில் சுக்ரவார மண்டபமும் காணப்படுகின்றன.

## ஸ்தலச் சிறப்பு.

காஞ்சியில் ருத்ரகோட்டம், புண்யகோட்டம், காம கோட்டம் என முக்கியமான மூன்று கோட்டங்கள் உள்ளன வென்று பண்டை நூல்கள் கூறுகின்றன. ருத்ர

கோட்டத்திற்கு ஏகாம்ரேச்வரரும், புண்ய கோட்டத்திற்கு வரதராஜப்பெருமாளும், காம கோட்டத்திற்கு ஸ்ரீ காமாக்ஷி அம்மையும் அதிஷ்டானமூர்த்திகள். அகர முதல் ஹகரம் வரையுள்ள மாத்ருகா அக்ஷரங்களின் ஸங்கியையை அனுஸரித்து இவ்வுலகில் 51 சக்தி பீடங்கள் உண்டென்று காமாக்ஷி விலாஸம் என்னும் நூலில் கூறப்படுகிறது. அவைகளில் பிராதானமானவை 18 எனவும், அவைகளில் முக்கியமானவை 3 எனவும், அம்மூன்றும் இப்புண்ணிய நாட்டில் த்ரிகோணாகாரமாக விளங்குகின்றன என்றும் சொல்லப்படுகிறது. இம்மூன்று முக்கிய பீடங்களாவன: 1. மத்யகூடம் எனப்படும் ஜாலந்தர பீடம். இது பஞ்ஜாப் மாகாணத்திலுள்ள ஜ்வாலாமுகி க்ஷேத்திரம் எனும் ஜலந்தர் நகரில் இருக்கிறது. 2. சக்தி கூடம் எனப்படும் ஒட்டியாண பீடம். இது அஸ்ஸாம் மாகாணத்தில் காமரூபா என்னும் க்ஷேத்திரத்தில் இருக்கிறது. 3. வாக்பவகூடம் என்னும் காமராஜ பீடம். இது காஞ்சிமா நகரில் காமாக்ஷி அம்பாள் ஸந்நிதியில் இருக்கிறது. இப்பீடம் ஹயக்ரீவரால் பூஜை செய்யப்பட்டது.

இக்காஞ்சீ மண்டலத்தின் எல்லையைக் குறிப்பிடும் பொழுது வடக்கே திருப்பதியிலுள்ள ஸ்வாமி புஷ்கரிணியும் கிழக்கே மஹாபலிபுரத்திலுள்ள ஸமுத்திரமும், தெற்கே தென்பெண்ணை நதியும், மேற்கே விரிஞ்சிபுரத்திற்கும் சற்று மேற்கே பாலாற்றை அடுத்துள்ள சிலாஹ்ரதம் என்னும் மடுவும் எல்லைத் தீர்த்தங்களாக கூறப்பட்டுள்ளன. இதற்குட்பட்ட நாடு 'துண்டீர மண்டலம்' அல்லது 'தொண்டைமண்டலம்' என்பதும் அதற்குத் தலைநகர் காஞ்சி என்பதும் அக்காஞ்சிக்கு

ஸ்ரீ காமாக்ஷி பிரதான தேவதை என்பதும் அநேக நூல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

காஞ்சிபுரத்தில் உள்ள காமகோட்டத்திற்கு ஸ்ரீபுரம், பத்மகாபகம், ஜீவன்முக்திபுரம், காமகோடி, என்ற வேறு பெயர்களும் உண்டு. காஞ்சிபுரத்தில் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், சக்தி ஆலயங்கள், குமார ஆலயங்கள் உள்ளிட்டு நித்ய பூஜைகள் நடக்கும் ஆலயங்கள் சுமார் 100 வரையில் இக்காலத்தும் இருக்கின்றன. உற்சவகாலங்களில் அநேகமாய் இந்த எல்லா ஆலயங்களிலுள்ள உத்ஸவ மூர்த்திகளும் காமாக்ஷி அம்பிகை இருக்கும் காமகோட்டத்தையே வலம்வருகின்றன. காமகோட்ட வீதிகளுக்குப் புறம்பே தூரத்திலுள்ள சின்ன காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள், பெரியகாஞ்சீபுரம் ஏகாம்ரேச்வரர் முதலிய தேவஸ்தானங்களில் கருடோத்ஸவம், ரதோத்ஸவம், ரிஷப வாஹனோத்ஸவம் முதலிய உத்ஸவங்களிலெல்லாம் முன்கூறிய தேவஸ்தானங்களின் உத்ஸவ மூர்த்திகள் காமகோட்டத்திற்கு வந்து காமகோட்டத்து நான்கு வீதிகளையே வலம் சுற்றிவிட்டுத்தத்தம் கோயில்களுக்கு எழுந்தருளுவது வழக்கமாய் இருந்து வருகிறது. இக்காஞ்சியில் உள்ள முக்கிய தேவஸ்தானங்களில் பிரதான கோபுரங்களெல்லாம் அநேகமாய் ஸ்ரீ அம்பாளுடைய ஆலயத்தை நோக்கியே ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை யெல்லாம் நோக்கின் காஞ்சிநகருக்கே தெய்வீக முறையில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் கேந்திரஸ்தானமாய் உத்தேசிக்கப்பட்டிருக்கிற தென்று தெரிய வருகிறது.

## பஞ்ச பூத க்ஷேத்ரம்.

சிவக்ஷேத்ரங்களில் திருவானைக்கா அப்புலிங்க க்ஷேத்ரமாகவும், திருவண்ணாமலை தேஜோலிங்க க்ஷேத்ர மாகவும், திருக்காளத்தி வாயுலிங்கக்ஷேத்ரமாகவும், திருச்சிற்றம்பலம் (சிதம்பரம்) ஆகாசலிங்க க்ஷேத்ர மாகவும், காஞ்சீபுரம் ப்ருதிவிலிங்க க்ஷேத்ரமாகவும் கூறப்படுகின்றன. இவை போல் வசிஷ்டமுனிவரால் ஸ்ரீராமனுக்கு உபதேசிக்கப்பட்ட 'சிந்தாமணி' என்னும் தந்திர நூலில் அயோத்திமா நகர் அம்பிகையின் பிருதிவி பீடமாகவும், வட மதுரைமாநகர் அப்புபீடமாகவும், இமயமலையிலுள்ள மாயாபுரி தேஜோபீடமாகவும், காசிமா நகர் வாயுபீடமாகவும், காஞ்சிமாநகரிலுள்ள காம கோட்டம் ஆகாச பீடமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. அதை ஒட்டி மூலஸ்தான காமாக்ஷி தேவியின் ஸந்நிதியில் பூமிக்குள் பிலாகாசம் விளங்குகிறது. அப்பிலாகாசமே அம்பிகையின் முக்யஸ்வரூபமாக ஆராதிக்கப்பட்டு வரு கிறது

## வைஷ்ணவத்திருப்பதி.

ஆழ்வார்களால் பாடல் பெற்ற 108 திருப்பதி களுள் 18 திருப்பதிகள் காஞ்சீபுரத்தில் இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கர்ப்பக் கிருஹச் சுவற்றின் ஒரு பக்கத்தில் ஒரு சிறு பிறையாக விளங்குகிறது. அப்பிறையிலிருக்கும் சாண் அளவுள்ள நாராயணமூர்த்திக்குக் கள்வர் என்று திருநாமம். மஹாலக்ஷ்மி கணவனைப்பற்றிய தன் குறைகளை ஸ்ரீ பரா சக்தியான காமாக்ஷி அம்மையிடம் அறிவித்துக் கொள்ள வந்திருக்கும் பொழுது, ஸ்ரீ நாராயணமூர்த்தி கள்ளத்

தனமாய் ஓர் பிறையில் நின்று ஒற்றுக்கேட்டதாக இத் திருப்பதியின் ஐதிகம். 108 திருப்பதிகளைத் தரிசிக்கும் பொருட்டு ஸ்தலயாத்ரை செய்யும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவ்விடத்திலும் வந்து தரிசிக்கின்றார்கள். இதைத் தவிர இரண்டாம் ப்ராகாரத்திலிருக்கும் தீர்த்தக்குளக் கரையில் "நின்றான், இருந்தான், கிடந்தான்," என்ற மூன்று திருநாமங்களுடன் மூன்று மாடங்களில் ஸ்ரீநாரா யணன் மூன்று மூர்த்திகளாக விளங்குகின்றார்.

## ஸ்தல மகிமையைக்குறிக்கும் நூல்கள்

### 1. பாகவதம்.

ஸ்ரீ சுகப்ரம்மம் பரீக்ஷித் மஹா ராஜாவுக்கு ஏழு நாட்களில் உபதேசித்த ஸ்ரீ பாகவதத்தில் தசமஸ்கந்தத் தில் ஸ்ரீ பலராமரின் தீர்த்த யாத்திரையைக் குறித்துக் கூறுமிடத்து, காஞ்சிமாநகர், "காமகோடிபுரி" எனக் கூறப்பட்டிருக்கிறது.


कामकोटिपुरीं काञ्चीं कावेरींचसरिद्वराम्।
श्रीरंगाख्यं महापुण्यं यत्र सन्निहितो हरिः ॥

காமகோடி புரீம் காஞ்சீம்
காவேரீம்ச ஸரித்வராம்!
ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம்
யத்ர ஸன்னிஹிதோ ஹரி: !!

(தசமஸ்கந்தம், அத்தி. 79, ச்லோகம் 14). இதிலிருந் தும் கச்சிமாநகருக்குக் காமகோட்டம் கேந்திரஸ்தான மென்று தெரிகிறது.



ஸ்ரீ காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தோற்றம்.



ஸ்ரீ காஞ்சிபுரத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
ஆலயத்தின் மற்றொரு தோற்றம்.

## (2) லலிதா ஸஹஸ்ரநாமம்—த்ரிசதீ-அஷ்டோத்தரம்

ஸ்ரீ பரதேவதையின் நாமாக்களைச் சொல்லும் பாஸ்கராசார்யரின் பாஷ்யத்துடன்கூடிய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்திலும், ஸ்ரீ ஆதிசங்கரபகவத் பாதாளுடைய பாஷ்யத்துடன் கூடிய லலிதா த்ரிசதி நாமாவிலும், ஸ்ரீ லலிதா அஷ்டோத்தர நாமாவிலும் கீழ்க்கண்ட பதங்கள் முறையே காணப்படுகின்றன.

कामाक्ष्यै नमः। कामकोटिकायै नमः।

காமாக்ஷ்யைநம:! காமகோடிகாயை நம:!! (ஸஹஸ்ரநாமம்)

कामकोटिनिलयायै नमः।

காமகோடிநிலயாயை நம: (த்ரிசதி)

कामकोटिमहापद्मपीठस्थायै नमोनमः॥

காமகோடி மஹாபத்ம பீடஸ்தாயை நமோ நம:

(லலிதா அஷ்டோத்தரம்.)

இவைகளிலிருந்தும் ஸ்ரீ காமகோடியான காமாக்ஷியின் மகிமை நன்கு புலப்படுகின்றது.

## (3) லலிதோபாக்யானம்.

ஸ்ரீ பரதேவதையின் உபாஸனு மார்க்கங்கள், மகிமை இவைகளைக் கூறும் லலிதோபாக்யான க்ரந்தத்தில் முதலாவதான "அகஸ்திய ஹிதோபதேசகதனம்"

என்ற அத்தியாயத்தில் கீழ்க்கண்ட ச்லோகங்கள் காணப் படுகின்றன.—

प्राप्तमासीन्महापुण्यं कांचीनगरमद्भुतम् ।
तत्र वारणशैलेन्द्रमेकाम्रनिलयं शिवम् ॥
कामाक्षीं कलिदोषघ्नीं अपूजयत् अथात्मवान् ॥

ப்ராப்தமாஸீன் மஹாபுண்யம்
காஞ்சீநகரமத்புதம் !!
தத்ரவாரண சைலேந்த்ரம்
ஏகாம்ரநிலயம் சிவம் !!
காமாக்ஷீம் கலிதோஷக்னீம்
அபூஜயத் அதாத்மவான் !!
(ச்லோகம் 5, 6.)

(பொருள்) மகாபுண்ணிய க்ஷேத்திரமான அத்யத்புதமான காஞ்சீநகரத்தை அகஸ்தியர் அடைந்தார். அங்கே ஹஸ்திகிரிநாதனையும் (வரதராஜப் பெருமாள்), மாமரத்து அடியை அடைந்த பரமசிவனையும், கலியின் பாபத்தை நீக்கும் காமாக்ஷியையும், அந்த அகஸ்தியர் பூஜித்தார்.

இதே லலிதோபாக்யானத்தில் கடைசியான "மந்த்ர ராஜ தத்ஸாதனாதி கதனம்" என்ற 34-வது அத்தியாயத்தில் கீழ்க்கண்ட ச்லோகம் காணப்படுகிறது.

भण्डासुरवधायैषा प्रादुर्भूता चिदग्नितः
महात्रिपुरसुन्दर्या मूर्तिस्तेजोविजृम्भिता ।
कामाक्षीति विधात्रातु प्रस्तुता ललितेश्वरी ।

பண்டாஸுரவதாயைஷா
ப்ராதுர்பூதாசிதக்னித: !!
மஹாத்ரிபுரஸுந்தர்யா மூர்த்தி
ஸ்தேஜோ விஜ்ரும்பிதா !!
காமக்ஷீதி விதாத்ராது ப்ரஸ்துதா
லலிதேச்வரீ !!

(பொருள்) பண்டாசுர யுக்தத்திற்காகவே சிதக்னியி லிருந்து இந்தத் தேவி தோன்றினள். இந்த மஹாத்ரி புரஸுந்தரியினுடையமூர்த்தியானது தேஜஸ்ஸிலிருந்தே கிளம்பியதாகும். இந்த லலிதேச்வரி பிரஹ்மாவினல் காமாக்ஷியெனத் துதிக்கப்பட்டனள்.

## (4) காமாக்ஷி விலாஸம்

ஸ்ரீ காமாக்ஷி அம்மையையும், தேவாலயத்தையும் பற்றிக் கூறும் இந்நூல் கார்வேட்நகர சமஸ்தானத்தா ரால் 1889ஆம் வருடத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இக்காமாக்ஷி விலாஸம் என்ற நூல் அவ்விடத்தில் இப் பொழுதும் கிடைக்கின்றது. இந்த காமாக்ஷி விலாஸம் லக்ஷ்மீதந்த்ரம் என்னும் தந்திர சாஸ்திரத்தின் ஒரு பாகம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இக்காமாக்ஷி விலாஸத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலில் நடக்கவேண்டிய பிரதிஷ்டை, பூஜை உத்ஸ வம் முதலிய க்ரியைகளெல்லாம், ஸ்ரீ வசிஷ்ட முனிவ ரால் ஸ்ரீ ராமருக்கு உபதேசிக்கப்பட்ட சிந்தாமணி தந்திரப்ராகாரம் நடத்தப்பட வேண்டியவை என்று கூறப் பட்டுள்ளது.

## (5) சங்கர விஜயங்கள்.

ஸ்ரீ ஆதிசங்காருடைய சரித்திரத்தைக் கூறும் சங்கர விஜயங்களிலெல்லாம் ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சிக்குவந்து காஞ்சிநகரத்தைப் புதிதாக நிர்மாணித்து மூன்று கோட்டங்களிலுமுள்ள ப்ரதான ஆலயங்களையும் நிர்மாணித்ததாகச் சொல்லப்படுகிறது. அனுசாரத்தைப் போக்கிச் சுத்தவைதிக ஆசாரத்துடன் பூஜைகளை ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காஞ்சீநகரத்தையும், அதிலும் விசேஷமாகக் காமகோட்டத்தையும் ஸ்ரீபராசக்தியின் ஸ்ரீ சக்ரயந்திரத்தின் கோணத்தை அனுசரித்தே நிருமித்ததாகப் பெரியோர்களுடைய கர்ணபரம்பரையிலும் நூல்களினாலும் தெரியவருகிறது. இன்றைக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவாலயத்திற்குட் சென்றால், கிழக்குமேற்கு முதலிய திக்குக்களே தெரியாமல் போய்விடும். ஸ்ரீ காமகோட்டத்தைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளும் அப்படியே, ஸ்ரீசக்ரயந்திரரூபமான நிர்மாணமாதலால் எல்லாத் தேவாலயங்களிலுமுள்ள மூர்த்திகளும் யந்திரத்தின் மத்ய பிந்து ஸ்தானமாகிய ஸ்ரீ காமகோடியையே ப்ரதக்ஷிணம் வருவதாகச் சொல்லுகிறார்கள். ஸ்ரீ ஆதிசங்கரமுனிவர் காஞ்சிக்கு வந்த பொழுது ஸ்ரீ அம்பாள் வெகு உக்ரகலையுடன் இருந்ததாகவும், ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் தம் தபோமஹிமையினால் அம்பிகையைச் சாந்தப்படுத்தி இக்கலியுகத்திலுள்ள ஜனங்களும்கூட அம்பிகையின் சாந்தமான அருளைப் பெறுமாறு பெரும்பணி புரிந்தனர் என்று காஞ்சியிலுள்ள ஜனங்களெல்லாம் இன்றும் சொல்லி வருகின்றனர்.

"வங்க என்ஸைக்லோபீடியா" (Bengal Encyclopaedia) அல்லது விச்வகோசம் என்னும் பதிப்பில்

ஸ்ரீ காஞ்சியில் காமாக்ஷி அம்மையின் ஆலயத்தின் ஒரு பாகத்தில் ஸ்ரீ ஆதிசங்கருடைய ஸமாதி இருக்கிறதென்று எழுதப்பட்டிருக்கின்றது.

कामाक्षी देवी का मन्दिर कुछ छोटा है। इसी का प्राङ्गण में भगवान् शंकराचार्य की समाधि है। इसी समाधि पर उनकी प्रस्तरमयी मूर्ति प्रतिष्ठित है॥

காமாக்ஷி தேவீகா மந்திர்
குச் ச்சோடா ஹை!
இஸீகா ப்ராங்க்ணமேம்
பகவான் சங்கராசார்யகீ
ஸமாதி ஹை! இஸீ ஸமாதி
பர் உன்கீ ப்ரஸ்தரமயீ மூர்த்தி
ப்ரதிஷ்டித ஹை!!

சிவரஹஸ்ய மென்னும் பண்டைய இதிஹாஸத்திலும் பதஞ்சலி விஜயமென்னும் காவ்யமாலைப் பதிப்பிலும் ஆனந்தகிரி சங்கரவிஜயத்திலும் சங்கராப்யுதயம் என்னும் காவ்யத்திலும் காஞ்சியம்பதியே ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் இறுதிஸ்தானமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## (1) இதர ஸ்தோத்திரங்களும் நூல்களும்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்களால் கைலாஸத்திலிருந்து, நந்திகேச்வரனால் அபகரிக்கப்பட்டது போக, கொண்டுவரப்பட்ட பாக்கி மந்திரமயமான ச்லோகங்களுடன் ஸ்ரீ அம்பாளைப்பற்றிச் சேர்க்கப்பட்டு, நூறு செய்யுள்களாக ஆக்கப்பட்ட நூல் ஸௌந்தர்யலஹரி.

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஸன்னிதானத்தில் சங்கர ஜயந்தி காலத்தில் ஸ்ரீ ஆதிசங்கர மூர்த்தியினுல் இந்நூல் படிக்கப்படும் உத்ஸவம் நடத்தப்பட்டு வருகிறது.— ஸ்ரீ மூக கவி என்னும் பிறவி ஊமைக் கவியினுல் ஸ்ரீ காமாக்ஷி அம்மையின்பேரில் இயற்றப்பட்டுள்ள 500 பாக்களிலும் "காஞ்சி, காமாக்ஷி, காமகோடி" என்ற முத்திரைகள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. இவைகளுள் சிலவற்றுள் ஸ்ரீ அம்பிகை "கங்கணம்" அதாவது வளைகளைப்பூண்ட கைகளையுடையவளாகக் கூறப்பட்டுள்ளாள். சரித்திரவரைக்கு முற்பட்ட (Pre—Historic) கரிகால சோழனின் திக்விஜயத்தைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருக்கும் ஓர் வெண்பாவும் கச்சியில் காமகோட்டத்தில் உள்ள அம்பிகையை வளைக்கைச்சி என்று கூறுகிறது.

"கச்சி வளைக்கைச்சி காமக் கோட்டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெரு வளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு,"
(சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லாருரை.)

ஸ்ரீ லலிதா உபாஸனு மார்க்கம், மகிமை முதலியவற்றைப் பற்றிக் கூறும் சென்னை ஸர்வகலாசாலைத் தேச சரித்திரச்சில்ப இலாகாவில் எட்டாம் நம்பர் அறிக்கையாகிய (Lalita Cult Bulletin of the Dept. of Indian History & Archaeology 1st June 1942) 30-ஆம் பக்கத்தில் ஸ்ரீ தேவியின் உபாஸனையும், காஞ்சியும், (Lalita Cult and Kanchi) என்ற தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு காணப்படுகிறது. "among the other

places sacred to Lalita is Kanci where the goddess enshrined herself by the name of Kamakshi. Here in this place **Lalita is said** to have attained her Vyakti as Kamakshi.

ललिता सैव कामाक्षी कांच्यां व्यक्तिमुपागता ।
सरस्वतीरमागौर्यः तामेवाद्यां उपासते ॥

லலிதாஸைவ காமாக்ஷீ காஞ்ச்யாம்
வ்யக்திமுபாகதா !!
ஸரஸ்வதீ ரமாகௌர்ய:
தாமேவாத்யாம் உபாஸதே !!

ஸ்ரீ ஆதிசங்கராசார்யாளால் அம்பாளைப்பற்றி இயற்றப்பட்டுள்ள ஸௌந்தர்யலஹரியைக் கவிராஜ பண்டிதர் என்பார் தமிழில் செய்யுள் ரூபமாக இயற்றி உள்ளார்.

## மூர்த்திகள்.

### பஞ்சகாமாக்ஷி.

ஸ்ரீ காமாக்ஷி அம்மையின் தேவாலயத்தில் உத்ஸவ மூர்த்திகளைத் தவிர ஐந்து காமாக்ஷி ஸ்தானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. (1) பிலாகாசம். (2) ஸ்ரீசக்ரம். (3) மூலகாமாக்ஷி. கர்ப்பக்ருகத்தில் ஸ்ரீசக்ரத்திற்கு மேற்கே நேர் அபிமுகமாகப் பத்மாசனியாய் முக்கண்ணுடனும் கிரீடம் தரித்துப் பாசம், அங்குசம், கரும்புவில், பஞ்சபாணம், இவைகளைத் திருக்கரங்களில் தரித்தவளாயும், சூரிய சந்திரர்களைக் கர்ணாபரணமாகத் தரித்தவளாயும், ஸ்ரீ மூலகாமாக்ஷி ஸ்ரீ ராஜராஜேச்வரி ஸ்வ

ரூபமாய் விளங்குகிறாள். (4) மூலஸ்தானத்தின் மூல மூர்த்திக்குப் பக்கத்தில் ஒற்றைக் காலால் நின்று தவக் கோலத்துடன் விளங்கும் தபஸ்காமாக்ஷி. (5) பங்காரு காமாக்ஷி. ஸ்ரீ பராசக்தியினுடைய நெற்றிக் கண்ணி னின்று ஆவிர்பவித்த திவ்ய தேஜோமயமான ஸ்ரீ த்ரிபுர சுந்தரியின் வடிவு பிரும்மதேவனால் க்ரஹிக்கப்பட்டுத் திவ்ய ஸ்வர்ணமயமாய் விளங்கும் மங்கள மூர்த்தியே ஸ்ரீ பங்காரு காமாக்ஷி. இவ்வைந்து மூர்த்திகளில் ஐந்தாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் பங்காரு காமாக்ஷி அம்பாள் சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு கர்நாடக யுத்தகாலத்தில், திருச்சி ஜில்லா உடையார் பாளையம் சமஸ்தானத்தாரால் பத்திரமான தங்கள் சமஸ் தானத்திற்கு எழுந்தருளுவிக்கப்பட்டாள். இன்றும் உடையார்பாளையம் சிவன்கோவிலில் காமாக்ஷி அம்மன் மண்டபம் என்ற பெயருடன் ஓர் மண்டபம் இருக் கிறது. சிறிது காலம் கழிந்த பின்னர் தஞ்சை மஹா ராஷ்டிர வம்சத்திலுதித்த அக்காலத்திய பிரதாபசிம்ம மன்னரால் தஞ்சை நகருக்கு எழுந்தருளுவிக்கப்பட்டு அங்குத்தனிக்கோவிலுடன் இன்றும்விளங்குகிறாள். மூல காமாக்ஷி, பிலாகாசம், ஸ்ரீசக்ரம், தபஸ்காமாக்ஷி முதலிய மூர்த்திகள் வீற்றிருக்கும் காயத்ரீ மண்டபம் உள்பட்ட மேடையில் மிதித்த தோஷம் ஸ்ரீ ஹேமகாமாக்ஷி என் னும் பங்காரு காமாக்ஷியைத் தரிசிப்பதினாலேயே நிவர்த் தியாய்விடும் என்று காமாக்ஷி விலாச புராணத்தில் கூறப்பட்டுளது. 6—6—1941ல் பங்காரு காமாக்ஷி அம்மனுக்குத் தத்காலம் ஸ்ரீ காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆசார்யாளால் ஜீர்ணோத் தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் செய்விக்கப் பட்டது. இந்தக் காஞ்சீபுரத்தில் இந்த பங்காரு



ஸ்ரீ மூலகாமாக்ஷி



ஸ்ரீ காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காமகோடி பீட ஸந்நிதியிலிருக்கும்
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதமூர்த்தி.

காமாக்ஷி அம்மன் எழுந்தருளியிருந்த ஸந்நிதிக்கெதிரிலேயே பெரியமண்டபத்தில் ஆதிசங்கரர் ஸர்வக்ஞ பீடம் ஏறியதாக ஐதீகம் இருக்கிறது. இந்த பங்காரு காமாக்ஷி இருந்த ஸந்நிதி இப்பொழுதும் காலியாகவே இருக்கிறது.

நான்காவதாகச் சொன்ன தபஸ் காமாக்ஷியின் உருவம் போன்ற உருவங்கள் ஸ்ரீ காமாக்ஷி அம்மனின் ஆலயத்திலும் ஏகாம்ரேச்வருடைய ஆலயத்திலும், மண்டபங்களிலும், தூண்களிலும், கோபுரங்களிலும், வாயிற்படிகளிலும், நிறைபக் காணப்படுகின்றன. ஸ்ரீ காஞ்சியில் அம்பிகை தவக்கோலத்துடன் இருப்பதால்தான் அங்குள்ள சிவாலயங்களில் மூலஸ்தானம் ஏற்படவில்லை என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். அந்தத் தவக்கோலம் ஒருகால் மடக்கப்பட்டு நாபியிலும், மற்றொருகால் பூமியிலும் வைக்கப்பட்டு, சிரஸில் ஜடாபாரத்துடனும், ஒரு கையில் மஹாலிங்கத்துடனும், ஒரு கையில் ஜபமாலையுடனும், பக்கலில் தீபஜோதியுடனும் விளங்குகிறது. இதுபோலவே ஆதிசங்கருடைய உருவமும் இவ்விரு ஆலயங்களிலும் அனேக இடங்களில் காணப்படுகின்றன. ஆதிசங்கர தபோமூர்த்திக்குத் தலையில் ஜடாபாரம் மாத்திரம் இல்லை. தண்டம், கமண்டலம், புஸ்தகம், இவை அதிகமாகப் பக்கலில் இருக்கின்றன. இந்தத் தவச் சங்கரமூர்த்திகளைத் தவிர வீற்றிருக்கும் சங்கருடைய மூர்த்திகளும் கோவிலிலுள்ள அநேக திருவாசல்களில் காணப்படுகின்றன.

ஸ்ரீ அம்மையின் கோயிலில் ஸ்ரீ தூர்வாஸரிஷியும், ஸ்ரீ ஆதிசங்கராசாரிய முனிவரும் சிலை உருவமாக ஒருவருக்கு ஒருவர் எதிர்முகமாக எழுந்தருளியிருக்கின்ற

னர். துர்வாஸமுனிவர் பராசக்தியின் வழிபாட்டில் முதன்மைபெற்றவர். அவர் அம்பிகையின் லோகமாகிய மணித்வீபத்தின் அமைப்பையும், அதை யொட்டிய யந்திர அமைப்பையும், சிந்தாமணிக்ருஹத்தின் அமைப்பையும், பரமசிவத்தின் இடதுபாகத்தில் அம்பிகை வீற்றிருக்கும் மேன்மையின் லாவண்யத்தையும், கிருபா நோக்கத்தையும் தழுவி 200 கவிகள் அருளியுள்ளார். அவை இன்னும் கவியுலகில் நிகரற்றவையாய் ஸ்ரீ தேவியின் மந்திரவழிபாடுகள் செய்பவர்களால் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீ ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளின் சிலை உருவம், கையில் துறவி தண்டம்பிடித்த நான்கு சிடர்களுடனும் தனியே நிற்கும் இரண்டு சீடர்களுடனும் கூடிப் புருஷப்ரமாண வடிவமாய் வீற்றிருக்கும் கோலத்துடன் விளங்குகிறது.

இந்த ஸந்நிதிக்கு எதிரில் ஸ்ரீ துர்வாஸர் ஸந்நிதி இருக்கிறது.

காயத்ரீ மண்டபத்தின் வெளியேயுள்ள ப்ரகாரத்தில் ஸரஸ்வதி தேவி வீணையுடன் வீற்றிருக்கிறாள். காயத்ரீ மண்டபத்தின் வாயிலுக் கெதிரில் அன்ன பூர்ணாதேவியும் கோவில் கொண்டிருக்கிறாள். காமாக்ஷி அம்பாள் கர்ப்பக்ருஹத்தின் ஒருபக்கத்தில் விஷ்ணுவினால் சபிக்கப்பட்ட அரூபலக்ஷ்மியும், மற்றொரு பக்கத்தில் அம்பிகையினால் சாபம் தீர்க்கப்பட்டுத் திரும்பவும் திருமாலிடம் சேர்க்கப்பட்ட ஸ்ரூபலக்ஷ்மியும் விளங்குகிறார்கள். காமகோட்டத்தம்மையின் காவற்றெய்வமான சாஸ்தாவின் மூர்த்தியும் கோவிலுக்குள் இருக்கிறது. இவைகளைத் தவிர ஸ்ரீ அம்பாளின் உத்ஸவமூர்த்தியும் உண்டு.

ஸ்ரீ அம்பாள் ஆலயத்தின் பெரிய கோபுரவாசலில் வெளியிலிருந்து உள்ளே வரும்பொழுது உட்பக்கம் படிக்குச்சமீபம் அதாவது இரண்டு பக்கம் சுவற்றிலும் உள்ளடக்கமாக, தென்னண்டைப்பக்கம் சுவற்றில் ஹயக்ரீவரையும் வடவண்டைப்பக்கம் அகஸ்த்தியரையும் (ஒன்றுக்கொன்று) நேர் முகமாக தரைமட்டத்திலிருந்து சுமார் 10அடிக்குமேல் ஸ்காபனம் செய்யப்பட்டிருக்கிறது.

---

## தீர்த்தங்கள்.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தைச் சார்ந்ததாக நான்கு புண்ணிய தீர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவைகளாவன:— பஞ்சதீர்த்தம், காயாரோஹண தீர்த்தம், இஷ்டஸித்திதீர்த்தம், சக்ரதீர்த்தம் என்பன. ஸ்ரீ அம்பாள் ஆலயத்திற்குள் ஸ்ரீ தேவியினுடைய கர்ப்பக்ருஹத்திற்கு மேற்குத்திக்கில் பஞ்சதீர்த்தம் இருக்கின்றது. இதில் சுக்ரவாரத்தில் ஸ்நானம் செய்தவர்களுக்குக் கோதாவரியில் நீராடிய புண்ணியமுண்டு என்று ஆன்றோர் கூறுவர். காயாரோஹணதீர்த்தத்தில் குருவாரத்தில் ஸ்நானம் செய்வோர்க்கு ஸிந்துநதியில் ஸ்நானம் செய்த புண்ணியமும், இஷ்டஸித்தி தீர்த்தத்தில் ஆதிவாரத்தில் ஸ்நானம் செய்வோர்க்கு நர்மதையில் ஸ்நானம் செய்த புண்ணியமும், சக்ரதீர்த்தத்தில் தேவியின் ஜன்ம நக்ஷத்திரத்திலும் பூர்வபல்குனி நக்ஷத்திரத்திலும் ஸ்நானம் செய்வோர்க்குக் கண்டகி நதியில் ஸ்நானம் செய்த பலனும் ஏற்படும் என்று முறையே தௌம்ய முனிவரும், ஸனத்குமாரரும், கார்த்தவீரியரும் கூறியுள்ளார்கள்.

---

## நிர்வாகம்.

காஞ்சியிலுள்ள இக்காமாக்ஷி அம்பாள் தேவாலயத்தின் நிர்வாகம் தற்காலம் இவ்வாலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாக்களான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தேவஸ்தானம் மானேஜரினுல் நடத்தப்பட்டு வருகிறது. நித்யபூஜை, உத்ஸவாதிகள் இவைகளின் திட்டம் வருமானத்தைக் காட்டிலுமதிகம். ஸ்ரீ அம்பாள் ஆலயத்தின் உத்ஸவாதிகளின் சிலவு வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக ஏற்பட்ட சில காலங்களில் பரம்பரை தர்மகர்த்தாக்களின் மடத்திலிருந்து துகைகள் கொடுக்கப்பட்டு கைங்கர்யம் நடத்தப்பெற்றிருக்கிறது. தற்காலம் ஸ்ரீ காமகோடி பீடத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தரவர்கள், மேற்படி பொறுப்பை ஏற்றுக்கொண்டதுமுதல் சுமார் ஐம்பதாயிரத்திற்கு மேலுள்ள தொகை ஸ்ரீ அம்பாளின் ஆலயத் திருப்பணியில் ஸ்ரீ மடத்திலிருந்து செலவிட்டிருக்கிறுர்கள். தவிரவும், ஸ்ரீ அம்பாளுக்காக ஸ்ரீ-சக்ரரூபமான வெள்ளி ரதமும், அதன் மத்தியில் ஸ்வர்ண ஸ்ரீ-சக்ரபீடமும் அமைக்கவேணுமென்று சிரத்தை யெடுத்துக்கொண்டு, மேற்படி கைங்கர்யமும் பெரும்பாலும் நிறைவேறிப் பூர்த்தியடையும் தறுவாயில் இருக்கிறது.

இக் காஞ்சிநகரிலே ஸ்ரீ காமாக்ஷியம்பாள் ஆலயத்திலுள்ள ஸ்ரீ சக்ரயந்திரம், பிலாகாசம் முதலியவைகளின்

ஜீர்ணோத்தாரணம், கும்பாபிஷேகம் முதலியவைகள் செய்யவேண்டிய பொறுப்பும், உரிமையும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கே உரியவை. சென்ற 1839 1840ஆம் வருடத்தில், அக்காலத்துப் பீடாதிபதியாகிய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி அவர்களால் இவ்வாலயத்தில் பாலாலயம், கும்பாபிஷேகம் முதலியவைகள் நடத்தப்பட்டிருப்பதாக அன்னாரின் யாத்திரை டைரியிலிருந்து தெரியவருகிறது. அதிலிருந்து ஒரு பாகம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

---

## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவாலயத்தில் அம்பாள் பாலாலய ஸ்தாபனம் கும்பாபிஷேகம் முதலியவைகளைப் பற்றிக் காணப்படும் ஸ்ரீ காமகோடி சங்கராசார்ய மடத்தில் இருக்கும் பழையடைரியில் ஒருபாகம்.

விளம்பி௵ பங்குனிமீ˚ உ௰அ௨ (1839) ௸யபத்திக்கிழமை ருத்திறி பொறப்பட்டு அம்பாசத்திறத்து மாற்கமாய் வரும்போது அம்மாசத்திரம் தேவஸ்தானம் சின்னமேளம், பெறியமேளம், பூறணகும்ப சகல சன்னாகத்துடனே யெதுரு கொண்டுவந்து கண்டாற்கள். அவடத்தில் மறியாதை பெத்துக்கொண்டு அதின்விட்டு பொறப்பட்டு திருபுவனத்துக்கு வந்து அவடத்தில் கோவில் பிறசாதம், முதலானது யெதுரு கொண்டுவந்து ஷெ மறியாதையை பெத்துக்கொண்டு, அதின்விட்டு பொறப்பட்டு மத்தியாற்சுனத்திற்கு வரும்போது ஷெ கோவிலிலிருந்து சின்ன மேளம், பெறியமேளம், சகலசன்னாகத்துடனேயும், இதுவுமல்லாமல் மகாருஜா அறைமணையிருந்து யானே

யெடுபடி முதலானது யெதுறுகொண்டுவந்து, அழைத்துக்கொண்டு போயி ஸ்ரீ சுவாமியாறவர்கள் ஸ்ரீ மடத்தில் விஜயம்சேயிவிச்சாற்கள்.

மறுனாள் ஷெ ஸ்ரீ உ௰௯ ௳ மகாறுஜா சாயேபு அவர்கள் பிக்ஷைபண்ணி வைச்சாற்கள். ஷெ மகாறுஜாவும் அன்னியதின சுவாமியாறவர்கள் தேறிசினத்துக்கு வந்துருந்தாற்கள்.

ஷெ ஸ்ரீ ௲௰௨ வுதயத்துக்கு திருவிடமருதூற் விட்டு பொறப்பட்டு ௰௫ நாழிகைக்கு குத்தாலத்துக்கு வரும் போது ஷெ தாலூகா தாசில் அப்பாஜீறுயர் ஷெ யூற் தேவஸ்தான பிறசாதம் சின்னமேளம், பெரிய மேளம், சகல சன்னாகத்துடனே யெல்லே சறகத்துவரையில் யெதுருகொண்டுவந்து அழைத்துக்கொண்டு போயி ஷெ யூறுக்கு சமீபத்துலிருக்கும் சத்திறத்தில் விஜயம் சேய்விச்சாற்.

அன்னியதினம் ஷெ யூற் கோவிலுக்கு போயி சுவாமி தறிசனம் பண்ணிக்கொண்டு சாகைக்கு வந்து சேர்ந்தார். அன்னியதினம் றெண்டுவேளை பூஜையும் ஷெ தாசில் அப்பாஜிறுயற் நடப்பிவித்தாற்.

ஷெ ஸ்ரீ ௲௰க ௳ குத்தாலம் விட்டுபொறப்பட்டு மாயூறத்துக்கு வரும்போது ஷெ தாலூக்கா தாசில், அசேஷ மகாஜெனங்கள் ஷெ யூற் தேவஸ்தான பிறசாதம் சின்னமேளம், பெறியமேளம், சகல சன்னாகத்துடனே யெல்லே சறகத்தில் யெதுறுகொண்டுவந்து அழைத்துக்கொண்டு போயி அகோற சாஸ்திறி சத்திறத்தில் விஜயம் சேயிவித்தாற். அன்னியதினம் அகோற சாஸ்திரி பிள்ளை சாம்ப

சிவ சாஸ்திறி பிக்ஷை பண்ணிவைச்சாற். மறனாளும் ஷெ யாறே பிக்ஷைசேயிதுவிச்சாற். அன்னியதினம் ருத்திரி வெளக்கு வேச்சி றெண்டுனாழிகைக்கிமேல் சகல சன்னா கத்துடனே பிறப்பிட்டு ஷெயூற் கோவிலுக்கு பொயி சுவாமிதெறிசனம் பண்ணிக்கொண்டு மறுபடியும் சாகைக்கி வந்து சேர்ந்தாற். மறனாளும் அவடத்திலேயே பூஜைநடந்தது.

விகாறிஹு சித்திறைமீ ௩௨ காலமே றெண்டு னாழிகைக்கி ஷெ மாயூறம் விட்டு பொறப்பட்டு வைத்தீசுவற சுவாமி கோவிலுக்கு வரும்போது ஷெ கோவில் தேவஸ்தானம் பிறசாதம், சின்னமேளம், பெறியமேளம் சகல சன்னாகத்துடனே யெதுரு கொண்டுவந்து அழைத்துக்கொண்டு போயி வுடனே ஷெசுவாமி தெறிசனம் பண்ணிக்கொண்டு அக்கிறகாறத்தில் கட்டியம் சுப்ப ருயற் வீட்டில் வந்து யெறங்கினார். அவடத்தில் ஷெ கிறும அசேஷதார்பிக்ஷை நடப்பிவித்தார்கள்.

ஷெ மீ 4௨ வைத்தீசுவர ஸ்வாமி கோவில் விட்டு பொறப்பட்டு சீகாழி வரும்போது ஷெ தாலூக்கா தாசீல்தார் தேவஸ்தானம் பிரசாதம், சின்னமேளம், பெறிய மேளம் சகல சன்னாகத்துடனே யெதுரு கொண்டு வந்து அழைத்துக்கொண்டு பொயி ஷெ கோவில் சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு கடவாசல் சிவசுவாமியயற் வீட்டில் வந்து யெறங்கினாற். அன்னிய தினம் அசேஷ மகாஜெனங்கள் பிக்ஷை பண்ணி வைத்தார். மறுனாள் அவடத்திலிருந்து ஷெமீ ௬௨ சாயங் காலம் அதின்விட்டு பொறப்பட்டு புத்தர் சத்திறம் வந்து சேந்தாற். அவடத்தில் ஷெ சத்திறம் விசாறணை முதலி ருத்திறி பூஜை நடப்பிவித்தார்.

ஷை ஸ்ரீ எவ காலமே புத்தூற் சத்திறம் விட்டு பொறப்பட்டு சிதம்பரத்துக்கு வரும்போது கொள்ளடத்தில் யெறங்கி அனுஷ்டானம் பண்ணிக்கோண்டு, சிதம்பறத்துக்கு வரும்போது ஷை யூற் தாலூக்கா தாசில் ஷையூற் ஆதியயர் ஞட்டு முத்தியப் பிள்ளை அசேஷ மகாஜனங்கள் பூறண கலசம் தெவஸ்தானம் பிறசாதம் சின்னமேளம், பெறியமேளம், சகல சன்ஞகத்துடனே யெதுறுகொண்டு வந்து அழைத்துக் கொண்டுபோயி சக்கறனுயக்கன் சத்திறத்தில் விஜயம் செயிதார். அன்வியதினம் ஷை தாசீல்தார் பிக்ஷபாதபூஜை முதலானதுகள் நடப்பிவித்தார் ஷை ஸ்ரீ அவ கூவ-யும் ஷை தாசில்தார் பிக்ஷ நடப்பிவித்தார். ஷை ஸ்ரீ யெவ காலமே சகல சன்ஞகத்துடனே தேவஸ்தானம் தெறிசனத்துக்குப் பொயி றெண்டாம் கோபுறவாசலில் பல்லாக்கு விட்டு யெறங்கி பாதுகையுடனே துவஜஸ்தம்பத்து வறையில் போயி அவடத்தில் பாதுகைவிட்டு மேளவாத்தியம் முதலான சகல சன்ஞகத்துடனே பிறுகாற பிறதக்ஷிணம் பண்ணிக்கொண்டு சபையில் சபாபதி சுவாமி தெறிசனம் பண்ணிக் கொண்டு மறியாதைகளை பெத்துக்கொண்டு அவடம் விட்டு பொறப்பட்டு ஷை சன்னதியில் இருக்கும் தில்லை கோவிந்தசுவாமி தறிசனத்துக்கு பொகும் போது ஷை கோவில் செட கோபுறம் முதலான பிறசாதத்துடனே யெதுறுகொண்டு வந்து அழைத்துக் கொண்டுபோயி அவடத்தில் சுவாமி தெறிசனம் பண்ணிக்கொண்டு பறிவட்டம் றெட்டை முதலான மறியாதைகளை பெத்துக்கொண்டு அம்மன் கோவிலுக்குப் பொயி சுவாமி தெறிசனம் பண்ணிக் கொண்டு அவடம் விட்டு பொறப்பட்டு திருவீதி பிறதக்ஷணமாயி ஷை சாகைக்கி வந்து சேந்தார்கள். பிறகு

றுனாள் அவடத்தில் இருந்து பூஜை முதலானது ௸ தாசில்தாரே நடப்பிவைத்துக் கொண்டுவந்தார். ௸ ௴ ௰௪ ௳ அவடம் விட்டு பொறப்பட்டு புவனகிறிக்கி வரும்பொது ௸யூற் தாசில்தார் அசேஷ மகாஜனங்கள் தெவஸ்தானம் பிறசாதம் சின்னமேளம் பெறிய மேளம், முதலான சகல சன்னாகத்துடனே யெதுரு கொண்டு அழைத்துக்கொண்டு போயி, அகிறகாறத்தில் யெறங்கினார். அன்னிய தினம் ௸யூற் அசேஷமகா ஜனங்கள். பூஜைபண்ணி வைத்தார். மறனாளும் அகிற காறம் மகாஜெனங்கள் பூஜை நடப்பிவைத்தார்கள்.

விகாரி ௵ சித்திரை௴ ௰௫௳. காலமே அவடம் விட்டு பொறப்பட்டு பறங்கிப்பேட்டைக்கு வரும்போது ௸யூற் அசேஷ மகாஜெனங்கள் பூறண கலசம் தேவஸ்தான பிறசாதம் சின்னமேளம் பெரியமேளம் முதலான சகல சன்னாகத்துடனே யெதுருகொண்டு வந்து அழைத்துக்கொண்டுபோயி அக்கிறகாறம் ருஜவீதி பிறதிக்ஷணமாயி சுப்பய்யர் வீட்டில் யெறங்கும்போது கப்பலில் ௰௪ குண்டும் வேட்டு போட்டார்கள். அன்னியதினம் அவடத்திலிருக்கப்பட்ட அசேஷ மகாஜனங்கள் பூஜை பண்ணி வைத்தார்கள்.

௸ ௴ ௰௭௳ காலமே அவடம்விட்டு பொறப்பட்டு கோமட்டி சத்திறம் வந்து அன்னியதினம் பூஜை முதலானது பண்ணிக்கொண்டு அன்னியதினம் அவடத்திலேயே இருந்தார்கள்.

மறனாள் ௰௮௳ காலமே ௸ சத்திறம் விட்டு பொறப்பட்டு கூடலூருக்கு வரும்போது கூடலூருக்கு சமீபத்திலிருக்கும் இறிசப்ப செட்டி சத்திறத்தில் பூஜை

பண்ணிக்கொண்டார்கள். அன்னிய தினம் சாயிந்திறம் கூடலூர் அசேஷ மகாஜெனங்கள் தெறிசனத்துக்கு வந்தார்கள்.

ஷை ௴ ௰௯௳ காலமே இருசப்ப செட்டி சத்திறம் விட்டு பொறப்பட்டு கூடலூருக்கு வரும்போது ஷையூற் அசேஷ மகாஜெனங்கள் தேவஸ்தானம் பிறசாதம், சின்னமேளம், பெறியமேளம், பூரண கும்பம் முதலான சகல சன்னுகத்துடனே யெதுருகொண்டு வந்து அழைத்துக்கொண்டு போயி வீதி பிறதக்ஷிணமாய் இறிசப்ப செட்டி சத்திறத்தில் யெறங்கினுர்கள். பிக்ஷை பண்ணி வைச்சார்கள். மறுனள் அவடத்திலிருந்து குருமூர்த்திய்யற் ஜாகைக்கு அழைத்துக்கொண்டு போயி அவடத்தில் பிக்ஷை பாதபூஜை பண்ணிக்கொண்டு ருத்திறி பூஜையும் அவடத்திலேயே நடந்தது

ஷை ௴ ௨௰௧௳ காலமே கூடலூர் இறிசப்ப செட்டி சத்திறம் விட்டு பொறபட்டு ஷை தாலூகாவை சேர்ந்த கொமறப்பசெட்டி அக்கிறகாறத்தில் இருக்கும் வசிஷ்டா சாத்திரி வீட்டில் யெறங்கி அவடத்தில் பூஜை முதலானது செயிதுகொண்டு அன்னிய தினம் அவடத்திலேயே இருந்தாற்கள்,

ஷை ௴ ௨௰௨௳ காலமே கொமறப்ப செட்டி அக்கிறகாறத்தில் இருந்து பொறப்பட்டு மறுபடியும் இறிசப்ப செட்டி சத்திறத்தில் வந்து சேர்ந்தார்கள். அன்னியதினம் அவடத்திலே பூஜை முதலானது செய்து கொண்டு ருத்திறி அவடத்திலேயே இருந்தார்.

ஷை ௴ ௨௰௩௳ கூடலூரை விட்டு பொறப்பட்டு திருப்பாபிலியூருக்கு வரும் போது ஷையூற் தேவஸ்

தானம் பிறசாதம் சின்னமேளம், பெறியமேளம் சகல சன்னுகத்துடனேயும் அசேஷ வித்வன் மகாஜெனங்கள் பூறணகும்பம் முதலான சுவஸ்திவசனத்துடனே யெதுரு கொண்டு வந்து அழைத்து கொண்டு போயி சத்திறத்தில் யெறங்கினர், அன்னிய தினம் ஷை யூற் அசேஷ மகாஜெனங்கள் பூஜை முதலானதும் நடப்பிவைத்தார். மறனாள் பூஜை செய்துக்கொண்டு ருத்திறி கால் நடையுடனே கொவிலுக்கு போயி சுவாமி தறிசனம் பண்ணிக்கொண்டு வந்தார்.

உ௯சூ௨ அவடத்திலிலேயே இருந்து உ௯ள௨ காலமே திருப்பாப்பிலியூர் விட்டு பொறப்பட்டு புதுச்சேறிக்கி சமீபத்துலிருக்கும் றத்தின முதலியார் சத்திரத்தில் யெறங்கினற். அன்னியதினம் அவடத்திலேயே பூஜை பண்ணிக்கொண்டு மறனாளும் அவடத்திலேயே பூஜை செய்துகொண்டாற்.

ஷை சித்திரையீ௳ உ௯ளு௨ சாயந்திறம் உ௯ச ழுழிகைக்கு றத்தின முதலியாற் சத்திறம் விட்டு பொறப்பட்டு தெயிவனாயகம் பிள்ளை சத்திறம் வந்து சேர்ந்தாற். ஷை சத்திறத்துக்கு தானே புதுச்சேறி அசேஷ வித்துவன் மகாஜெனங்கள் வைதீகாள், லவுகீகாள், தேவஸ்தானம், சின்னமேளம், பெரியமேளம் சகல சன்னுகத்துடனேயும் ஷை யூற் கெவுனற் யெடத்திலிருந்து உ௯ பேற் சிபாயிகள் கத்தி துப்பாக்கிகள், தாற், தம்பூறு, பில்லாங்குழல் இவ்வளவு சன்னுகத்துடனே கூட யெதுருகொண்டு ஷை தெய்வனாயகம் பிள்ளை சத்திறத்திற்கு வந்து சேந்தாற். பிறகு இவடத்துலிருந்து மேலெழுதிய சன்னுகத்துடனே வீதி பிறதக்ஷிணமாயி அஸ்தமனத்துக்கு அக்கிறகாறத்தில் சங்கறப்

யற் வீட்டில் பந்தல் முதலானது போட்டு இருந்தது. அவ டத்திலேயே ஸ்ரீ சுவாமியாறவர்களும் விஜயம் செயிதார்.

மறனுள் ஷெ உ௰௯௨ அகிறகாற மகாஜெனங்கள் பிக்ஷை பாதபூஜை நடப்பிவித்தார்கள். ௩௰ ௨ வைசி யாள் பிக்ஷை நடப்பிவைத்தார்கள். ௩௰௧ ௨ சாயிந்திறம் அவடம் விட்டு பொறப்பட்டு வீதி பிறதிக்ஷணமாயி சகல சன்னுகத்துடனே விஷ்ணு கோவிலுக்கு போயி அவடத்தில் ஷடகோபுறம் முதலான மறியாதைகள் பெத்துக்கொண்டு அவடத்திலிருந்து சிவன்கோவிலுக் குப்போயி சுவாமி தெறிசனம் பண்ணிக்கொண்டு மறு படியும் பல்லாக்கில் விஜயம் பண்ணி அவடத்திலிருந்து தானே செட்டிதெருவு மாற்கமாயி ஜாகைக்கு வந்து சேர்ந்தார்.

வைய்யாசிஶ்ரீ ௧௨ செட்டிகள் பிக்ஷை பண்ணி வைத்தார்கள். ஷெ மாதம் ௨ ௨ காலமே புதுச்சேறி யிலிருந்து பொறப்படும்போது ஷெ யூற் கெவுணறவர் கள் வுத்திறவுப்படிக்கி ௨௰ பேற் சிப்பாயிகள் தம்பூறு பில்லாங்கொலியுடன் அழைத்துக்கொண்டு போயி யெல்லே சறகத்துவறையில் விட்டுவிட்டு சுவாமியா றவர்கள் யெடத்தில் உத்திறவு வாங்கி கொண்டு போனுற் கள். அவடத்திலிருந்து பொறப்பட்டு வில்லியநெல் லூர் கோமட்டி சத்திறம் வந்து சேந்தார். அன்னிய தினம் ஷெ சத்திறத்து கோமட்டியே பிக்ஷை பண்ணி வைச்சாற்.

ஷெ ஶ்ரீ ௩௨ வில்லியநெல்லூற் விட்டு பொறப் பட்டு மத்தியானம் ௰௫ ஞழிகைக்கி வளவனூறுக்கு வரும்போது ஷெயூற் மகாஜெனங்கள் யெதுறுகொண்டு

வந்து அழைத்துகொண்டு போயி அக்கிறகாறத்தில் ஜாகை முஸ்திப்பு பண்ணிக்குடுத்தார்கள். அன்னிய தினம் ஷ அக்கிறகாறத்தாற் பிக்ஷை நடப்பிவித் தார்கள்.

ஷ ஸ்ரீ௨௨ வளவனூற் விட்டு பொறப்பட்டு வு காழிகைக்கு விளுப்புறத்திற்கு வரும்போது ஷயூற் யெல்லை சறகத்தில் ஷயூற் தாசீல்தாற் தாலூகா முனிசிப்பு சயிதாபேட்டை வெங்கடாசலய்யர் அசேஷ வித்துவன் மகாஜெனங்கள் யெதுறு கொண்டுவந்து அழைத்து கொண்டுபோயி வீதி பிறதிக்ஷணமாயி வரும் போது தாலூகா முனிசிப்பு வெங்கடாசலய்யர் வீட்டுக்கு அழைத்து கொண்டுபோயி பாதபூஜை பண்ணி உ௰ வறுகன் பொறும் -பட்டு தாபிறாகொடுத்து அவடத்தி லிருந்து பொறப்பட்டு மருபடியும் தெறிவில்வந்து மெறுட்டியன் சத்திறத்தில் யெறங்கினாற். அன்னியதினம் ஷ வெங்கடாசலய்யர் பிக்ஷை பாதபூஜை பண்ணினாற்.

ஷ ஸ்ரீ ௨௨ விளுப்புறம்விட்டு பொறப்பட்டு விக்கிற பாண்டிக்கு வந்து சேந்தாற். அவடத்திலும் ஷ முனிசிப்புதார் பிக்ஷைபண்ணி வைத்தார்.

ஷ வைகாசிஸ்ரீ ௩௨ வுதயத்துக்கு விக்கிறபாண்டியம் விட்டு பொறப்பட்டு திண்டிவனத்துக்கு சமீபத்தி லிருக்கும் பசாறு அக்கிறகாறத்தில் வந்து சேந்தாற். அன்னியதினம் ஷ அக்கிறகாறத்தாற் பிக்ஷை பண்ணி வைத்தாற்கள்.

ஷ ஸ்ரீ எ௨ உதயத்துக்கு பசாறுவிட்டு பொறப் பட்டு திண்டிவனத்துக்கு வரும்போது ஷயூற் யெல்லை சறகத்தில் ஷ தாலூகா தாசில் சுப்பய்யர் தேவஸ்

தானம் சின்னமேளம், பெறியமேளம் தேவஸ்தானம் பிறசாதம் பூறணகும்பம் சுவஸ்திவசனம் முதலான சகல சன்னகத்துடனே யெதுருகொண்டு வந்து அழைத்துகொண்டுபோயி வீதி பிறதக்ஷிணமாயி தானே விஷ்ணு கொவிலுக்குப் போயி சேந்தாற். அவடத்தி லேயே ஜாகை. அன்னியதினம் பிக்ஷை பாதபூஜை முத லானது தாசில்தார் நடப்பிவைத்தார். மறனள் ஷெ ஸ்ரீ ௮ ௨ அவடத்திலேயே இருந்தாற். ௬ ௨ யும் அவ டத்திலேயே இருந்தார்.

ஷெ ஸ்ரீ ௰௨ வுதயத்துக்கு திண்டிவனம் விட்டு பொறப்பட்டு தையாறுக்கு வந்து சேர்ந்தாற். அன் னியதினம் அந்தவூறில் சொந்த பிக்ஷை செய்து கொண்டார்.

ஷெ ஸ்ரீ ௰௧௨ தையாறு விட்டு பொறட்பட்டு வந்த வாசிக்கு வரும்போது ஷெ தாலூகா தாசீல்தாற் முத லான பேற்கள் யெதுறுகொண்டு வந்து அழைத்துக் கொண்டுபோயி சத்திறத்தில் ஜாகை முஸ்தீப்பு பண்ணிக் கொடுத்தாற். அன்னியதினம் ஷெ தாலூகா தாசீல் தார் கிருஷ்ணறாயற் பிக்ஷை பண்ணிவைத்தாற்.

ஷெ ஸ்ரீ ௰௨௨ உதயத்துக்கு வந்தவாசி விட்டு பொறப்பட்டு வுதிச்சி யெட்டு ஞழிகைக்கி பென்னத் தூறுக்கு வந்து சேந்தாற். அன்னியதினம் ஷெயூறுக்கு வுத்திறநல்லூற் தாசில் ௵மசுவாமிய்யற் யெதுறு கொண்டு சறுவசாகிறதை பண்ணினாற். அன்னியதினம் பிக்ஷை பாதபூசை ஷெ தாசீல்தார் நடப்பிவைத்தாற்.

ருத்திரி வளக்குவச்சி ஞது ஞளுகைக்கு ஷெியூர் விட்டு பொறப்பட்டு ருத்திரியே நடந்து மறனுள் ஷெ வைய்யாசிமீ ௰௯ ௨ வியாழக்கிழமை வுதயத்துக்கு பாலாறுக்கு வந்து சேர்ந்தாள். அவடத்தில் ஸ்நானம அனுஷ்டானம் பண்ணிக்கொண்டு இருக்கும்போதே காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்மனுடைய ஷட கோபுறம் பல்லக்கில் யெடுப்பி வைத்துக்கொண்டு பிற சாதம், அக்கிரகாரம் முதலான அசேஷ வித்வன் மகா ஜெனங்கள் தாசில்தாற் மேளவாத்தியம் முதலான வாத்தியங்களு டனே க்ஷீரனதியென்குற பாலாத்துக்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீ சுவாமியாறவர்கள் அனுஷ்டானம் முடித்துக்கொண்டு சவாரியில் விஜயம் பண்ணி ஷெ நதியில் கொஞ்சதூரம் வந்தவுடனே அவடத்தில் பல்லாக்குக் கட்டி பாதுகை போட்டுக் கொண்டு றெண்டு அடி போயி அவடத்தில் பாதுகை விட்டவுடனே ஷெ ஷடகோபுறம் முதலான மரியாதைகள் பெத்துக் கொண்டு, கோவிலாறுக்கு சுவாமியவர்கள் பண்ண வேண்டிய அஞ்சிவருகன் மறியாதை பண்ணிப் போட்ட வுடனே, சவாறியில் ஸ்ரீசுவாமியாறவர்கள் விஜயம்பண்ணி, ஷடகோபுறம் முன்னாலே சுவாமியவாள் பின்னாலேயுமாக பொறப்பட்டு பிறுதுகளுடனே பிள்ளேபாளயம் மாற்க மாயி கீழகோபுற வாசலில் பல்லாக்குக் கட்டி பாதுகை முதலான சகல சன்னகத்துடனே துவஜஸ்தம்பத்து வரைக்கும் போயி, அவடத்தில் பாதுகை விட்டு சகல பிறுதுகள் மேளவாத்தியம் முதலான வாத்தியங்களுட னே பிருகாற பிறதக்ஷிணம் பண்ணிக்கொண்டு அம்மன் கோவிலுக்கு போயி ஸ்ரீ பகவத் பாதாளவாள் இருக்கிற தற்கு சமீபமான கோபுற வாசலில் மேளவாத்தியம் பெரிய கொடை மகறதோறணம் நிறுத்திபொட்டு, வுள்பிறகாற

பிறதக்ஷிணமாயி வுபயசாமறம் வெள்ளித்தடி தங்கத் தடியுடன் வுள்ளே போயி முன்னதாயி பகவத் பாதாளுடைய தெறிசனம் பண்ணிக்கொண்டு ஷை பகவத் பாதாளுக்கு காவிவஸ்தறம் குடுத்து அவடத்திலிருந்து பிறதக்ஷிணமாய் போயி ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தறிசனம் பண்ணிக்கொண்டு ஷை அம்மனுக்கு எய றாபாயி பொறுமான காசீ பட்டு கொடுத்து அவடத்தில் மறியாதை பெத்துக் கொண்டு பிறதக்ஷிணமாயி தானே காமகோடி பீடம் வுத்சவமூற்தி தறிசனம் பண்ணிக்கொண்டு மறுபடியும் பிறதிக்ஷணமாயி ஸ்ரீ பகவ்த்பாதாள் இருக்குறயெடத்துக்கு சமீபத்தில் கிழே உட்கார்ந்து ஜபம் பண்ணிக் கொண்டு இருக்கும் போது ஷை கோவில் பிறசாதம் கொண்டுவந்து வைத்தாற். அவடத்தில் அந்த மறியாதை வாங்கிக்கொண்டு மறுபடியும் துவஜஸ்தம்பத்தின் அடியில் வந்து பாதுகை போட்டுக்கொண்டு சகல சன்னுகத்துடனே கோபுற வாசலில் பல்லாக்கு இருக்குற யெடத்துக்கு வந்து அவடத்தில் பல்லாக்கு யேறிக்கொண்டு சகல சன்னுகத்துடனே திருவீதி பிறதக்ஷிணமாயி ருஜவீதியோடே வந்து கெங்கைகொண்டான் மண்டபத்துக்கு சமீபத்திலிருக்கும் ஸ்ரீ சுவாமியளவாள் சொந்த மடத்தில் விஜயம் பண்ணினுற். அன்னிய தினம் ஷை தாலூகா தாசீல்தாற் ஸ்ரீனிவாசருபற் பிக்ஷைபண்ணிவைச்சாற்.

விகாறி-ஹூ ஷை வைய்யாசி மாசம் ௰சவ வெள்ளிக் கிழமை வுதிச்சி ௩ ஞழிகைக்கி பெறிய காஞ்சிபுறம் விட்டு யேகாம்றேசுவறசுவாமி கோவில் சுவேதச்சத்திறம் சின்ன மேளம், பெறியமேளம் முதலான சகலசன்னுகத்துடனேயும் அசேஷ வித்வன் மகாஜெனங்களுடன்கூட பொறப் பட்டு ருஜவீதி பிறதக்ஷிணமாயி ஆடுசன்பேட்டை மாற்கமாயி சின்ன காஞ்சிபுறத்துக்குப் போயி ஷை கோவிலுக்கு

சமீபத்திலிருக்கும் னூலுகால் மண்டபத்துக்கு மேலண்டை சவாரிகட்டி அவடத்தில் யெறங்கி பாதுகை போட்டுக்கொண்டு அஞ்சடிபோனவுடனே அவடத்கில் ஸ்ரீவாதருஜ சுவாமி சடகோபம் வந்தது. ஷை சடகோபத்தை அவடத்தில் சாத்திக்கொண்டு மறியாதை பெத்துக் கொண்டவுனே ஷை சடகோபத்துக்காக அஞ்சிவருகன் குடுத்து மறுபடியும் பல்லாக்கில் யேறிக்கொண்டு ஸ்ரீ சடகோபுறம் முன்னே, சுவாமிளவாள் பின்னே போயிகோபுற வாசல் மத்தியில் பல்லாக்குக் கட்டி அவடத்தில் பாதுகை போட்டுக் கொண்டு, சகலசன்னுகத்துடனே துவஜஸ்தம்பம் வரைக்கும் போயி, அவடத்தில் பாதுகை விட்டு யெறங்கி மேள வாத்தியங்கள் சகல பிருதுகளுடனே கோவிலுக்குள் போயி, உள்பிறகாறம் பிறதக்ஷிணம் பண்ணிக்கொண்டு, மலையின்பேரில் யேறுகிறபோது சத்திரங்களையும் சங்கித மேளங்களையும் நிருத்தி, வெள்ளித் தடி, தங்கத்தடி, உபயசாமரம், நவில்த்தொம்பை, விசிரிகள், கெவுரிகாளை, திருச்சனம், தவளசங்கம், டமருகா இவ்வளவு சன்னுகத்துடனேயும் சங்கீத பாடகாளோடுகூட, மலையின் பேரில் யேரி தேவருஜ சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டார்கள்.

அவடத்தில் ஸ்ரீ சடகோபுரமும், ரெட்டை மாலையும் அஞ்சிருகன் தகடியும் பொகுமானம் வாங்கிக்கொண்டு, அவடத்தில் பிறதக்ஷிணம் பண்ணிக் கொண்டு மலையை விட்டு மேல சொல்லிய பிருது வாத்தியங்கள் முதலானதுகளுடனேகூட மலையின் பேரில் யிருந்து யெறங்கி மேள வாத்தியங்கள் பிருதுகள் வாத்தியம் முதலானதுகளுடனேகூடி த்வஜஸதம்பத்தினடியில் மறுபடியும் பாதுகை போட்டுக்கொண்டு பல்லாக்கு யெறங்கி இருக்கிற யெடத்

துக்கு வந்து பல்லாக்கு யேரி அவ்விடத்தில் மாடவீதி பிறதக்ஷிணமாயி—தென்னண்டவீதியில் நம்முடைய மடத்தில் யெறங்கி ஒரு ஜாழி யிருந்து அப்பால் ஓடனே புறப்பட்டு சிவகாஞ்சி மடத்துக்கு வந்து சேர்ந்தார். பிற்பாடு அவடத்திலேயே ௨௰ நாள் இருந்து பூஜை முதலானது செயிதுகொண்டு இருந்தாற்கள்.

ஷி விகாறி-ஸு ஆனிமீ ௰௨ ௳ ஸ்ரீ காமாக்ஷியம்மன் பாலஸ்தாபன முகூர்த்தம் பண்ணி, ஸ்தூபி முதலானதும் மருமத்து வேலைக்கு விட்டார்கள். அதன் பிறகு 8-ஞள் வறைக்கும் காஞ்சிபுறத்திலேயே இருந்து ஷி மீ ௰௧ ௳ காஞ்சிபுறம் விட்டுப் பொறப்பட்டு அவளூருக்குப் போகும்போது ஷி அக்கிறகாற அசேஷ மகாஜெனங்கள் பூரண கும்பம் சகல சன்னகைத்துடனே யெதிருகொண்டு அழைத்துக்கொண்டு போயி அக்கிறகாறத்தில் ஜாகை பண்ணிவைத்தாற். அன்னியதினம் பிக்ஷை பாத பூஜை ஷி அக்கிறகாறம் அசேஷ மகாஜெனங்கள் நடப்பிவைத்தாற். மறுனள் ௰௧ ௳ ஷி யூர்விட்டு பொறப்பட்டு ஸ்ரீமடத்து கிரமம் தம்மனூருக்கு போயி சேர்ந்தாற்.

## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான உத்ஸவங்களின் விபரம்:—

| மாதம். | உத்ஸவம். | நாட்கள். | உபயக்காரர். | விபரம். |
|---|---|---|---|---|
| சித்திரை | ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம் | 10 தினங்கள் | கடைசி நாள் எசயனூர் மாதுஸ்ரீ காமகோடி கோகிலத்தம்மாள். | இந்த உத்ஸவம் வைசாக சுக்ல பஞ்சமியை முதல் தினமாகக்கொண்டு பத்து தினங்கள் நடைபெறுகிறது. முதல் ஒன்பது நாட்களும் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதமூர்த்தி மாத்திரம் பிராகாரத்தில் எழுந்தருளச் செய்யப்படுகிறது. பத்தாவது நாள் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளையும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத மூர்த்தியையும் கோவிலைச்சுற்றியுள்ள நான்கு ராஜவீதிகளிலும் எழுந்தருளச் செய்யப்படுகிறது. இந்த பத்து தினங்களிலும் ஸ்ரீ ஆதிசங்கரரால் இயற்றப்பட்ட ஸௌந்தர்யலஹரியில் தினம் பத்து ச்லோகங்கள் ஸ்ரீ அம்பாளுக்கு எதிரே ஸ்ரீ ஆசார்மூர்த்தியை நிறுத்தி படிக்கப்பட்டு வருகிறது வழக்கம். |
| வைகாசி | வஸந்த உத்ஸவம் | 3 தினங்கள் | முதல் தினம் ஸ்ரீ நல்லதம்ப முதலியார். | முதல் இரண்டு தினங்களும் ஸ்ரீ அம்பாள் பிராகாரத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகின்றாள். மூன்றாவது |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| | | | இரண்டாவது நாள் ஸ்ரீ ராஜ மாணிக்க முதலியார். மூன்றுவது நாள் கொல்லா சத்திரம் ஸ்ரீ ராகவலு செட்டியார். | நாள் மாலை ஸ்ரீ அம்பாள் ராஜவீதிக்கு எழுந்தருளச் செய்யப்படுகின்றுள். |
| ஆனி | வ்யாஸ பூஜை உத்ஸவம்* | ஒரு நாள் | | வ்யாஸ பூர்ணிமை தினத்தன்று கோவிலில் உள்ள ஸ்ரீ ஆசார்யமூர்த்தி நான்குவீதிகள் வழியாகக் காலையில் ஸர்வ தீர்த்தக் கரைக்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. அங்கு ஆதியில் ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சீபுரத்திற்கு விஜயம் செய்த காலத்தில் முதல் முதலாக தங்கியிருந்த கோவிலென்று. சொல்லப்படுகிற ஸ்ரீ விச்வநாதஸ்வாமி |

* வ்யாஸ பூஜை இம்மாதத்தில் வராமல் ஆடி மாதத்தில் வந்தால் அப்பொழுது இவ்வுத்ஸவம் நடைபெறும்.

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
| --- | --- | --- | --- | --- |
| | | | | கோவிலில் அபிஷேக ஆராதனம் செய்விக்கப்பட்டு பிறகு ஆஸ்தானம் சேர்க்கப்படுகிறது. ஆஸ்தானம் சேர்ந்ததும் வ்யாஸ பூஜை நடத்தப்படுகிறது. |
| ஆடி | ஆடிப்பூர உத்ஸவம் | ஒரு நாள் | காஞ்சீபுரம் வருமான வரி ஆபீஸ் சிப்பந்திகள் | பிரகாரத்தில் ஸ்ரீ அம்பாள் புறப்பாடு |
| ஆவணி | விநாயக சதுர்த்தி உத்ஸவம் | ஒரு நாள் | | ஸ்ரீ விநாயகருக்கு உத்ஸவம் நடத்தப்படுகிறது' |
| ,, | ஆவணிமூல உத்ஸவம் | ஒரு நாள் | | ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ அம்பாள் பிராகாரத்திற்கு எழுந்தருளப்படுகிறது. |
| புரட்டாசி | விச்வரூப யாத்திரை உத்ஸவம் | ஒரு நாள் | | பாத்ருபத சுக்ல பௌர்ணமி யன்று காலையில் ஸ்ரீ ஆசார்ய மூர்த்தி புறப்பாடு செய்விக்கப்பட்டு, ஸ்ரீ உபநிஷத் ப்ரும்மேந்திர மடத்துக்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது, அங்கு விசேஷ ஆராதனைகள் நடந்த பிறகு மாலையில் |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
| --- | --- | --- | --- | --- |
| புரட்டாசி | விச்வரூப யாத்திரை உத்ஸவம் | ஒரு நாள் | | வீதிகள் வழியாக பவனி செய்விக்கப்பட்டு கோவிலுள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. வ்யாஸ பூஜை உத்ஸவம் நடந்து இரண்டுமாதங்களுக்குப்பிறகு இவ்வுத்ஸவம் வரும். |
| ,, | நவராத்திரி | 10 நாட்கள் | | , பிரதிதினம் ஸ்ரீமூல காமாக்ஷி, உத்ஸவ காமாக்ஷி இரண்டிற்கும் விசேஷ அபிஷேகங்கள் நடைபெறும். பிரதி தினமும் நவாவர்ண பூஜை, கன்யா பூஜை நடத்தப்படுகிறது. இரண்டு வேளையும் யாகசாலை உண்டு. மாலையில் ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி பிராகாரத்தில் பிரதக்ஷிணமாக எழுந்தருளச் செய்யப்பட்டு, தெற்கு பிராகாரத்திலுள்ள நவராத்திரி மண்டபத்தில் இரக்கப்பட்டு வாத்யங்களுடன் நைவேத்ய தீபாராதனைகள் செய்யப்பட்டு, சூரஸம்ஹாரம் ஆனபின் பிராகார மார்க்கமாக ஆஸ்தானம் சேர்ப்பிக்கப்படுகிறது. துர்காஷ்டமியன்று ஸ்ரீ துர்கை அம்பாள் புரப் |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| | | | கொல்லா சத்ரம் டிரஸ்டி அவர்கள் உபயம். | பாடு செய்விக்கபபடுகிறது. 10-வது நாள தேவஸ்தானக் திருக்குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும். 10-வது நாள் தினப்படி பூஜைகளைத்தவிர ஸுவாஸினி பூஜையும், பிரம்மசாரி பூஜையும் நடைபெறுகிறது. |
| ஐப்பசி | ஐப்பசி பூர உத்ஸவம் | ஒரு நாள் | | ஐப்பசி மாதம் பூர நக்ஷத்திரத்தன்று மாலை ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி பிராகாரத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகின்றாள். தெற்கு பிராகாரத்தில் ஐப்பசி பூர பண்டபத்தில் மண்டகப்படி தீபாராதனை நடத்துவது வழக்கம். இன்று தினம் தான் மூலஸ்தானத்திலுள்ள பிலாகாசத்திற்கு பால் அபிஷேகம் நடைபெறுகிறது. இது வருஷத்திற்கு ஒரு தினம்தான். |
| ,, | தீபாவளி உத்ஸவம் | ஒரு நாள் | ஸ்ரீ C. S. நடேசய்யர் உபயம் | தீபாவளியன்று விடியற் காலையில் எல்லா ஸந்நிதிகளிலும் தைலாபிஷேகமும், ஸ்ரீ அம்பாளுக்கு நான்கு ராஜவீதி உத்ஸவமும் உண்டு. |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| கார்த்தி | பரணி உத்ஸவம் | ஒரு நாள் | | கார்த்திகைமாதம் பரணி நக்ஷத்திரத்தன்று ஸ்ரீஅம்பாள் ஸந்நிதியில் ஹோமம் செய்து தீபம் ஏற்றப்படும். |
| ,, | கார்த்திகை உத்ஸவம் | ,, | | இன்று ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அலங்காரத்துடன் உபயக்காரர் ஏற்பட்டால் நான்கு ராஜவீதி உத்ஸவம் நடைபெறும். உபயக்காரர் இல்லாவிட்டால் பிராகார உத்ஸவம். |
| மார்கழி | திருவாதிரை உத்ஸவம் | ஒரு நாள் | ஸ்ரீ. K. வடிவேலு முதலியார்வகையறு | இந்த மாதம ஆருத்ரா நக்ஷத்திரத்தன்று தனுர்மாஸ பூஜைக்கு முன் ஸ்ரீ மூல காமாக்ஷிக்கும், ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷிக்கும் விசேஷ அபிஷேகம் நடத்தி, தனுர்மாஸ காலஸந்தி பூஜைக்குப் பின் உத்ஸவமூர்த்தி நான்கு ராஜவீதிகளுக்கும் எழுந்தருளச் செய்யப்படுகிறது. |
| ,, | கொட்டகை உத்ஸவம் | 7 நாட்கள் | | இந்த உத்ஸவம் மாட்டுப் பொங்கலுடன் முடிவடைகிறது. பிரதி தினமும் ஸ்ரீ அம்பாள் உத்ஸவமூர்த்தி வடக்குப் பிராகாரத்திலுள்ள கொட்டகை மண் |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| | | | | டபத்திற்கு எழுந்தருளச்செய்யப்படுவது வழக்கம். கடைசி தின உத்ஸவத்திற்கு கனுத்திருப்பாவாடை என்று பெயர். இன்று விசேஷ சித்திரான்ன நிவேதனமும் வினியோகமும் உண்டு. |
| தை | ஸங்கராந்தி | ஒரு நாள் | | இன்று உச்சி காலத்தில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனமும் சக்கரான்ன நிவேதனமும் நடைபெறுகிறது. |
| " | திருவூரல் உத்ஸவம் | " | | தைமாதம் மக நக்ஷத்திரத்தன்று காலையில் நித்ய பூஜைக்குப் பிறகு ஸ்ரீ அம்பாள் உத்ஸவ மூர்த்தி விசேஷ அலங்காரத்துடன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த வேகவதி நதிக் கரையிலிருக்கும் கதிர் பூந்தோட்டத்திற்கு எழுந்தருளச்செய்யப்படுகிறது. அங்கு விசேஷ அபிஷேகமும், நடப்பது வழக்கம். |
| மாசி | சிவராத்ரி | ஒரு நாள் | முதல் கால அபிஷேகம் லிங்கப்பய்யர் வீதி சுப்பராமய்யர் | இன்று இரவு எல்லா காலங்களிலும் விசேஷ அபிஷேகங்கள் உண்டு<br>துவாரா. |

| மாதம் | உத்ஸவம் | நாட்கள் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| மாசி | ப்ரம்மோத்ஸவம் | 12 தினங்கள் | | இது விபரங்கள் தனியாக போடப்பட்டிருக்கிறது. |
| பங்குனி | தெப்போற்சவம் | மூன்று நாள் | முதல்நாள் மரத்தொட்டி வியாபாரிகள். 2-வது நாள் செங்கல்பட்டு S. P. ராமய்யர் 3வது நாள் மேஷக்குப்பேட்டை துளசிஷா உபயம் | |
| ,, | பங்குனி உத்திரம் | ஒரு நாள் | ஒக்கப்பிறந்தான் குளத்தெரு குடிகள் உபயம் T. S. ராமஸ்வாமி அய்யர். | காலையில் ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி ஒக்கப்பிறந்தான் குளத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. மாலை நான்கு ராஜ வீதிகள் வழியாக ஸ்ரீ ஏகாம்ரநாத ஸ்வாமி அம்மனுடன் ஷை ஸந்நிதி பதனாறுகால் மண்டபம் வரை சென்று பின்பு தேவஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்வது வழக்கம். |

## —: ப்ரும்மோத்ஸவம். :—

இவ்வுத்ஸவம் மாசி மாதத்தில் நடைபெறுகிறது. உத்ஸவ ஆரம்பத்திற்கு முதல் நாள் மாஸ விநாயகர் புரப்பாடு, ம்ருத்ஸங்க்ரஹணம், அநுக்ஞை, வாஸ்துசாந்தி, முதலிய பூர்வாங்கங்கள் ஆன பிறகு, மறுநாட் காலையில் த்வஜாரோஹணம் நடைபெறும்.

### ப்ரும்மோத்ஸவ விபரம்.

| தினம் | காலை, மாலை | வாஹனம் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| முதல் தினம் | காலை | விருஷப வாஹனம் | A. D. வெங்கட்டராமய்யர் | |
| ,, | மாலை | மான் வாஹனம் | | |
| 2-வது நாள் | காலை | மகர வாஹனம் | | |
| ,, | மாலை | சந்திரப் பிரபை | காஞ்சீபுரம் ரயில்வே ஸ்டேஷன் சிப்பந்திகள் உபயம். | |
| 3-வது நாள் | காலை | ஸிம்ஹ வாஹனம் | பெரிய காஞ்சீபுரம் இரும்புக் கடை வியாபாரிகள். | |
| ,, | மாலை | யானை வாஹனம் | காஞ்சீபுரம் | |

| தினம் | காலைமாலை | வாஹனம் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| | | | பட்டு நூல் ஜவுளிவியாபாரிகள் சங்கத்தார் | |
| 4-வது நாள் | காலை | சூர்யப் பிரபை | | |
| ,, | மாலை | ஹம்ஸ வாஹனம் | பெரிய காஞ்சிபுரம ஷாப்பு வியாபாரிகள். | |
| 5-வது நாள் | காலை | பல்லக்கு | | |
| ,, | மாலை | நாக வாஹனம் | சென்னை லாட் கோவிந்த தாஸ் | இன்று மோஹினி அலங்காரம். இன்றுமட்டும் ராஜ வீதி உத்ஸவமும் உண்டு. |
| 6-வது நாள் | காலை | சப்பரம் | | |
| ,, | மாலை | கிளி வாஹனம் | ஸத்திய விஜயராவ். | ஜகன்னாதய்யர் வீட்டுவாசலில் மண்டகப்படி. |
| 7-வது நாள் | காலை | ரதோத்ஸவம் | காஞ்சிபுரம் பலசரக்கு வியாபாரிகள். | |
| 8-வது நாள் | காலை | பத்திர பீடம் | சென்னை S. ரத்தினவேல் செட்டியாரின் நிதியி | |

| தினம் | காலே மாலே | வாஹனம் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| | | | விருந்து சிறு உபயம். | |
| 8-வது நாள் | மாலே | குதிரை வாஹனம் | பெரிய காஞ்சிபுரம் தான்ய வியாபாரிகள் சங்கத்தார். | |
| 9-வது நாள் | காலே | ஆள்மேல் பல்லக்கு | கோயம்புத்தூர் எலக்ட்ரிகல் இன்ஜினீயர் T. S. ஜெயராம அய்யர் சிறுதுகை ஸமர்ப்பணே. | |
| ,, | மாலே | காமகோடி விமானம் | பெரிய காஞ்சிபுரம் கைலி வியாபாரிகள் சங்கம். | |
| 10-வது நாள் | காலே | சரபபக்ஷி வாஹனம் | | ஸ்ரீ அம்பாள் வீதி உத்ஸவம் முடிந்ததும் தேவ |

| தினம் | காலை மாலை | வாஹனம் | உபயக்காரர் | விபரம் |
|---|---|---|---|---|
| 10-வது நாள் | மாலை | கல்பகோத்யானம் (மாவடி ஸேவை) | காஞ்சிபுரம் பட்டு, மளிகை, சாய விபாபாரிகள். | ஸ்தான திருக்குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும். உத்ஸவம் முடிந்ததும் த்வஜ அவரோஹணம் |

குறிப்பு:—பதினோராவது நாள் மாலை மஹா மேருவாஹனம். (ஜவுளிக்கடை ஸ்ரீகிருஷ்ணராவ்.) பனிரெண்டாவது நாள் உதயாத் பூர்வம் விச்வ ரூபதர்சனம். உத்ஸவம் ஆன பிறகு உபயக்காரர்கள் ஏற்படுவதற்கு தகுந்தவாறு விடாயாற்றி உத்ஸவம் நடைபெறுகிறது. விடாயாற்றி கடைசிதினத்திற்கு முதல்தினம் சந்தனக்காப்பு உத்ஸவம் நடைபெறும். விடாயாற்றி கடைசிதினம் நான்குவீதிகளில் புஷ்பப்பல்லக்கு உத்ஸவம், ஸ்ரீ ஸீதாராமஸா வம்சத்தினரால் நடைபெறுகிறது.

## APPENDIX A.

சித்திரை மாதம் 1வ [illegible] ப்ரவேச உத்ஸவம். அன்று ஸ்ரீ அம்பாள் ப்ராகார [illegible] மண்டபத்தில் இறங்கியதும், வரு[illegible] பஞ்சாங்க படனம் ஆனபிறகு, தீபாராதனை நடத்தி ஆஸ்தானம் சேர்ப்பிக்கப்படுகிறது.

## APPENDIX B.

பிரதி வருஷம் வ்யாஸ பூஜை ப்ரயுக்தமாக வ்யாஸ பூஜைக்குச் சில தினங்கள் முந்தி, ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞையுடன் இவ்வூர் மஹாஜனங்களுக்கு ஸ்ரீ அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமுக படனம் செய்யப்பட்டு வருகிறது. இதுஸமயம் ஸ்ரீ மடத்திலிருந்து ஸ்ரீமுகத்தை மேள வாத்தியங்களுடன் ஊர்வலமாக தேவஸ்தானத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பித்து, சுக்ரவார மண்டபத்தில் ஸ்ரீ ஆசார்யாள் உத்ஸவ மூர்த்தியையும் எழுந்தருளச்செய்து, ஸ்ரீமுக படனம் செய்யப்பட்டு வருகிறது.

## APPENDIX C.

பிரதி சுக்ரவாரத்திலும், அமாவாஸையிலும், மாதப் பிறப்பிலும் ஸ்ரீ அம்பாளுக்கு பிராகார உத்ஸவமும், பௌர்ணமியன்று மாலை ஸ்ரீ ஆசார்ய உத்ஸவமூர்த்தியுடன் மாடவீதி உத்ஸவமும் உண்டு. மாடவீதி உத்ஸவம் A. ஜகன்னாதய்யர் உபயம். பௌர்ணமி உத்ஸவத்திற்குப் பிறகு அம்பிகைக்கு நவாவர்ண பூஜை நடத்தப்படுகிறது.

———

வீரை ஸ்ரீகவிராஜபண்டிதர் இயற்றிய

# ஸௌந்தர்ய லஹரீ.

[illegible] பணிக்கப்புனர் பலமணியின் வடிவெடுத்
 [illegible]முன் தம்பொன் முடிமேல்
இந்துகலை நவமணியி னெழுதபல நிறமடைந்து
 இலதுபதி சயவ டிவினாற்
சந்த்ரகலை நன்றுநன் றென்பர்சிலர் அன்றன்று
 சந்த்ரகலை இந்த நிறமோ
இந்த்ரசிலை யென்பர்சில ராதலால்
 யாதென வழுத்த உமையே. (42)

கோலநகர் விசாலையாய் நிரந்தரகல்யாணியாய்க்
 குவலயத்தா லயோத்தியாய்க் குலமதுரை தானுய்ச்
சாலஒளிர் போகவதி யாய் அமுத தாரையாய்த்
 தண்ணளியால் அவந்தியாய்ச் சகவிசையை யெனலாய
நீலவிழி புடைபரந்து நெடுநகரப் பெயர்கவர்ந்து
 நீண்டுசேந் தரிபரந்து நிகரொழிக்கு மென்றால்
ஆலவிட மமுதெனக்கொண் டருந்தியவுன் மத்தர்புரம்
 அதனிலொரு புறங்கவர்த லதிசயமோ தாயே. (49)

அரனிடத்திற் பேரின்ப மருளும் அவ னல்லார்பால்
 அருவருக்கும் அவன்முடிமே லணிநதியைச் சிறும்
பாவுநுதல்விழிஅழல்முன்பார்த்திலபோ லதிசயிக்கும்
 பணியாய பணிவெகுளப் பயந்தனபோ லொடுங்கும்
விரைமுளரிப் பகைதடிந்து வீரதம் படைக்கும்
 வினவுதுணைச் சேடியற்கு விருந்துநகை விளைக்கும்
இரவுபக லடிபரவும் எளியனைக்கண் டருள்புரியும்
 இத்தனையோ படித்தனஉன் இணைவிழிகள் தாயே. (51)

கலைமகளும் பொதுமடந்தை கமலையுமற் றவளே
மலைமகள் நீ கற்புடைய வனிதையெனப் பகரும்
குலமறைக ளெதிர்கொடுநின் குரவினையும் அணையா
முலைகுழையப் புணர்வதுநின் முதல்வரல தில்லையால். (96)

PRINTED AT THE
SRI JANARDANA PRINTING WORKS. LTD.
TOWN HIGH SCHOOL ROAD, KUMBAKONAM.